செ.வெ.எண்:37/ ஜனவரி நாள் : 26.01.2020

# இராமநாதபுரம் மாவட்டம்
# 71-ஆவது குடியரசு தினவிழாவில்
# மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கொ.வீர ராகவ ராவ், இ.ஆ.ப., அவர்கள் தேசியக் கொடியை ஏற்றி வைத்து மரியாதை செலுத்தினார்.

இராமநாதபுரம் மாவட்ட நிர்வாகத்தின் சார்பில், இராமநாதபுரம், காவல்துறை ஆயுதப்படை மைதானத்தில் இன்று (26.01.2020) நடைபெற்ற 71-ஆவது குடியரசு தினவிழாவில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.கொ.வீர ராகவ ராவ்,இ.ஆ.ப., அவர்கள் தேசியக் கொடியினை ஏற்றி வைத்து, காவல்துறை அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக்கொண்டு, சுதந்திரப் போராட்டத் தியாகிகளைக் கௌரவித்தார்.

அதன்பின்பு காவல் துறையில் சிறப்பாகப் பணியாற்றி பத்தாண்டுகள் நிறைவு செய்த 63 காவலர்களுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் பதக்கங்களையும், 53 காவலர்களுக்கு பாராட்டுச் சான்றிதழ்களையும், மாவட்ட நிர்வாகத்தின் மூலம் பல்வேறு அரசுத் துறைகளில் சிறப்பாக பணியாற்றிய 231 அலுவலர்களுக்கு பாராட்டுச் சான்றிதழ்களையும் வழங்கினார்.

தொடர்ந்து முன்னாள் படைவீரர்கள் நலத்துறை, வருவாய்த்துறை, பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை, குடிசை மாற்று வாரியம், மாவட்ட தொழில் மையம், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, வேளாண்மைத் துறை, தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம், மாற்றுத்திறனாளிகள் நலத்துறை, சமூக நலத்துறை, தோட்டக்கலைத்துறை, தாட்கோ, தொழிலாளர் நலத்துறை, வேளாண்மை பொறியியல் துறை ஆகிய துறைகளின் சார்பாக மொத்தம் 182 பயனாளிகளுக்கு ரூ.1,03,61,742/- (1 கோடியே 03 இலட்சத்து 61 ஆயிரத்து 742) மதிப்பிலான நலத்திட்ட உதவிகள் மற்றும் மானியத்துடன் கூடிய கடனுதவிகளையும் வழங்கினார்.

பின்னர் இராமநாதபுரம் ஹவுசிங்போர்டு மெட்ரிக் உயர்நிலைப்பள்ளி, கும்பரம் அரசு மேல்நிலைப்பள்ளி, திருவரங்கம் திருஇருதய மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி, இராமநாதபுரம் லூயிஸ்லெவல் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி ஆகிய பள்ளிகள் மற்றும் கலைப்பண்பாட்டுத்துறையின் கீழ் உள்ள மாவட்ட ஜவஹர் சிறுவர் மன்றம் ஆகியவற்றைச் சார்ந்த மாணவ, மாணவியர்கள், சிறுவர், சிறுமியர்கள் கலந்து கொண்ட கலைநிகழ்ச்சிகளும் நடைபெற்றன.

இவ்விழாவில் இராமநாதபுரம் சரக காவல்துறை துணைத்தலைவர் திரு.ரூபேஷ் குமார் மீனா,இ.கா.ப., அவர்கள், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் டாக்டர் வி.வருண்குமார்,இ.கா.ப., அவர்கள், கூடுதல் ஆட்சியர்/திட்ட இயக்குநர் (ஊரக வளர்ச்சி முகமை) திரு.மா.பிரதீப்குமார்,இ.ஆ.ப., இராமநாதபுரம் சார் ஆட்சியர் டாக்டர் என்.ஓ.சுகபுத்ரா,இ.ஆ.ப., மாவட்ட ஊராட்சிக்குழுத் தலைவர் திரு.உ.திசைவீரன், கூடுதல் காவல் கண்காணிப்பாளர் திரு.அ.தங்கவேலு, மாவட்ட ஆட்சியர் அவர்களின் நேர்முக உதவியாளர் (பொது) திரு.கோ.கோபு, உதவி ஆணையர் (கலால்) திரு.சி.ரவிச்சந்திரன் உள்ளிட்ட அனைத்து அரசுத்துறை அலுவலர்கள், முக்கியப் பிரமுகர்கள், மாணவ மாணவியர்கள், உள்ளாட்சி மற்றும் கூட்டுறவு அமைப்பின் பிரதிநிதிகள், பொதுமக்கள் கலந்துகொண்டனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்**